வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.01.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 17 பக்கங்கள் : 12



## இலங்கையில் முதலீடு செய்வதற்கு வாருங்கள்

### சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுர அழைப்பு

பீஜிங், ஜன. 17

நிலையான, வலுவான ஆட்சி மற்றும் வெளிப்படைத் தன்மையுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார்.

11

# இலங்கை அரசின் திட்டத்துக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பு

### சீனப் பிரதமர் லீ சியாங் உறுதி


பீஜிங், ஜனவரி 17

**"வளமான நாடு - அழகான வாழ்க்கை" உருவாக்குவதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக சீனா பிரதமர் லீ சியாங் உறுதியளித்துள்ளார்.**

பீஜிங்கில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே சீனப் பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கி யுள்ளார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சீனப் பிரதமர் லி சியாங்

11



## மன்னாரில் நீதிமன்றுக்கு முன்பாக துப்பாக்கிச் சூடு!

### இருவர் உயிரிழப்பு! இருவர் படுகாயம்! வழக்குக்காக வந்தவேளை பயங்கரம்!

மன்னார், ஜன. 17

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று வியாழக் கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வழக்கொன்றுக்காக

11



## உலக புகழ்பெற்ற சீன நிறுவனங்களுடன் ஜனாதிபதி அநுர விசேட கலந்துரையாடல்

பீஜிங், ஜன. 17

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்த முதலீட்டு அமர்வில் கலந்து கொண்டு, சீனாவின் பல முன்னணி முதலீட்டு நிறுவனங்களுடன் பல விசேட கலந்துரையாடல்களை நடத்தினார்.

அதன்படி, சீனா தொலைத்தொடர்பு நிர்மாண நிறுவனம் , சீனா பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட சீன மெடலஜிகல் கோபரேசன் நிறுவனம், ஹூவாவி, பி.வை.டி ஒட்டோ போன்ற முன்னணி சீன நிறுவனங்களுடன் விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து முன்னணி சீன முதலீட்டு நிறுவனங்களுக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, அரசாங்கம் என்ற வகையில், முதலீட்டாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித

11

## தீர்வுத் திட்ட நகர்வு பற்றி 18இல் முடிவு எடுப்போம்!

### கூறுகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன. 17

"புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பேசி வருகின்ற விடயம் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள

11

## பொங்குதமிழ் மக்கள் பேரெழுச்சி பிரகடனத்தின் 24ஆம் ஆண்டு இன்று!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 17

பொங்குதமிழ் நிகழ்வு இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பொங்குதமிழ்ப் பிரகடன பொதுநினைவுத் தூபியில் அனைத்து மாணவர்களும் உணர்வுடன் ஒன்று திரண்டு இந்த பொங்குதமிழ் நிகழ்வில் பங்கெடுக்கவுள்ளனர்.

(அ-05)

## சீன ஜனாதிபதியை இலங்கைக்கு வருமாறு அழைத்தார் அநுரகுமார

பீஜிங், ஜன. 17

சீனாவுக்கு நான்கு நாள் அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று முன் தினம் புதன்கிழமை சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்குடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

இந்த சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு, முதலீட்டு உக்குவிப்பு, சுற்றுலா அபிவிருத்தி உட்பட

11

## சிறீதரன் எம்.பி முடிந்தால் ஸ்டாலினுடன் பேசி மீனவர்கள் பிரச்னையை தீர்த்து வைக்கட்டும்!

### யாழ். மீனவர் அமைப்பு சவால்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 17

முடிந்தால் கிளிநொச்சியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர், தமிழக முதலமைச்சருடன் கதைப்பதற்கு நேரத்தைப் பெற்று, அவருடன் கலந்துரையாடி எமது மீனவர்களின் பிரச்னையை தீர்த்து வைக்கட்டும். அதன் பின்னர் நாங்கள் அவரது செயற்பாடுகளை வரவேற்கின்றோம் என யாழ்.மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் பிரான்சிஸ் ரட்ணகுமார் சவால் விடுத்துள்ளார்.

சம்மேளனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர் மேலும்

11

## இலங்கை இந்திய மீனவர் விவகாரம் மீனவர்களை ஏமாற்ற சிலர் முயற்சி!

### முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 17

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ்நாட்டு முதலமைச்சருடன் பேசப்போவதாகக் கூறி வடபகுதி மீனவர்களை சில அரசியல்வாதிகள் ஏமாற்ற முயற்சிப்பதாக முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இடம் பெற்ற அயலவர்கள் நிகழ்வில் பங்கேற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பில் முதலமைச்சரிடம் பேசாமை தொடர்பில் அவரிடம் கருத்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுக்கு 56 பில்லியன் ரூபாய் நட்டம் அடையும் மின்சார சபை!

கொழும்பு, ஜன. 17

எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்துக்கு, சில்லறை விலையில் மூலப் பொருளை கொள்வனவு செய்வதன் மூலம் இலங்கை மின்சார சபைக்கு 56 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அனல் மின் உற்பத்திக்கு மானிய விலையில் எரிபொருள் கிடைத்தால் நாட்டில் மின்சார கட்டணத்தை 11 வீதம் குறைக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்-

பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஒரு ஆலோசனை அறிக்கை மூலம் மின்சார சபைக்கு ஆறு மாதங்களுக்கு 56 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது.

டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள் அனல் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது.

எரிபொருள் நிலையங்களில் இருந்து மக்கள் வாங்கும் அதே விலையில்தான் மின்சார சபையும், டீசலை மின் உற்பத்திக்கு பெற்று கொள்கிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார உற்பத்திக்கான எரிபொருள் செலவை ஈடுசெய்யும் விலையில் வழங்கினால்,நாட்டில் உள்ள மின்சார நுகர்வோருக்கு ஆண்டுதோறும் 56 பில்லியன் ரூபாயை சேமிக்க மின்சார சபைக்கு வாய்ப்பு உள்ளது - என்றார். (அ)

# யாழில் அதீத போதையுடன் இரண்டு மாணவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் இரு மாணவர்கள் அதீத போதையுடன் பொலிஸாரினால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

மாணவர்கள் இருவரும் போதை மாத்திரைகளை உட்கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்ததை அடுத்து , மாணவர்களுக்கு அவற்றை விநியோகித்த நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட இரு மாணவர்களையும் , மருத்துவப் பரிசோதனைக்கு பின்னர் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

வட்ஸ் அப் செயலி ஊடாக மாணவர்களை உள்ளடக்கிய குழுக்கள் ஊடாக போதை மாத்திரை விநியோகங்கள் நடைபெற்று வருவதாக யாழில் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், பொலிஸார் அது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என பல தரப்பினரும் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆடையில் தீ பிடித்து மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

நுளம்புக்கு புகை மூட்டிய சமயம் ஆடையில் தீப்பிடித்து உடல் கருகி மூதாட்டி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கரவெட்டி மேற்கு - கவுடாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் பொன்னம்மா (வயது 81) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்

தனிமையில் வசித்து வந்த அவர் நுளம்புக்கு தீ மூட்டிய போது அவரது ஆடையில் தீ பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# வனவளத் திணைக்களம் களவாடியுள்ள காணிகளை உடன் விடுவிக்கவேண்டும்

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 17

வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து களவாடிய காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மான்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

முசலிப் பிரதேச செயலர் பிரிவில் பெருமளவான மக்களின் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதாக கிராம மட்ட பொது அமைப்புக்களால் குறித்த கூட்டத்தில் முறையீடு செய்யப்பட்டது. இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை முசலிப் பிரதேச செயலகத்தால் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதியுடன் வனவளத் திணைக்களத்திடமிருந்து 3510 ஏக்கர் காணிகளையும், வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து 1110 ஏக்கர் காணிகளையும் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளதாகவும் இதன்போது முசலிப் பிரதேச செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

பிரதேச செயலர், கிராம அலுவலர், காணி உரிமையாளர்களுக்குத் தெரியாமல், வன இலாகா தமது எல்லைக்கற்களை இட்டு மக்களின் காணிகளை அபகரித்து வருகின்றது.

அத்தோடு வனஜீவராசிகள், தொல்லியல் திணைக்களத்தினர், படையினர் என பல்வேறு திணைக்களங்களும் இவ்வாறு எமது மக்களின் காணிகளை அபகரிப்புச்செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதில் மிக அதிகளவான மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது.

இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும், அதேபோல் நாம் இது தொடர்பில் ஜனாதிபதியுடனும், உரிய ஏனைய தரப்புக்களுனும் பேசத் தயாராக இருக்கின்றோம்.

வனவளத் திணைக்களத்தின் அபகரிப்புச் செயற்பாடே மிக மோசமாகக் காணப்படுகின்றது. எனவே வனவளத்திணைக்களம் மக்களிடமிருந்து திருடிய காணிகளை முதலில் விடுவிக்கப்படவேண்டும் - என்றார்.

இதன்போது குறித்த கூட்டத்தில் பங்கேற்றிருந்த கிராம மட்ட பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கருத்தை கைதட்டி வரவேற்றனர்.

இதன்போது முசலிப் பிரதேசசெயலர் கருத்துத் தெரிவிக்கையில்,

இடப்பெயர்விற்கு முன்னர் மக்களால் பயன்படுத்தப்பட்டு, இடப்பெயர்விற்குப் பின்னர் வனஇலாகவால் கையகப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படவேண்டிய மக்களின் காணிகள், எதிர்காலத்தில் மக்களின் குடியிருப்புத் தேவை, மக்களின் விவசாயத் தேவை, மேச்சல் தரவை, ஏனைய பொதுத் தேவைகள் கருதி மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதியோடு வனவளத் திணைக்களத்திடமிருந்தும், வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்தும், முசலிப் பிரதேச செயலகம் உள்ளிட்ட மன்னாரின் ஏனைய பிரதேசசெயலகங்களாலும் காணிகள் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டது. (அ)

# விவசாயப் போதனாசிரியர்கள் சங்கம் வடக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்கள கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில், சாதகமாக பரிசீலிக்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் வரவுப் பதிவேட்டு இயந்திரத்தில் கையொப்பமிடுவது தொடர்பான விவகாரம் ஆராயப்பட்டு, ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக தீர்வு காணப்பட்டது.

மாதத்தில் 14 நாட்கள் வெளிக்கள கடமையில் ஈடுபடுவதுடன், பிரதி திங்கட்கிழமைகளில் வரவு பதிவேட்டு இயந்திரத்தில் கையெழுத்திட்டு அலுவலகக் கடமைகளாற்றவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது.

அதேவேளை, விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்களப் பணிக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை, சாதகமாகப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார். (அ)

# வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மின்சாரம் துண்டிப்பு!

## கட்டணம் செலுத்தாமையே காரணம்

வவுனியா, ஜன. 17

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மின்சாரம் நேற்று புதன்கிழமை துண்டிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு பாதுகாப்பாக குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட முடியாத நிலைக்குச் செல்லுமா என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாத நிலையில் நேற்று முன்தினம் காலை மின்சார சபை ஊழியர்களால் குறித்த அலுவலகத்துக்கான மின் துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக அங்கு மின்சாரம் தடைப்பட்டதோடு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரத்தை வழங்குவதற்கு ஏதுவான சூழல் காணப்படாமையினால் மின் பிறப்பாக்கி மூலமாகவும் மின்சாரம் வழங்கப்படவில்லை. இந்நிலையில் அங்கு கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த ஊசிகள் குளிரூட்டிகளில் வைக்கவேண்டிய நிலைமை காணப்பட்டபோதிலும் மின் துண்டிக்கப்பட்டமையினால் அவை பழுதடைந்து விடுமா என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து குறித்த தடுப்பூசிகளைப் பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் மின் கட்டணம் நீண்ட காலமாக செலுத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பிலும் உரிய அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

# மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் தடுப்பூசிகளுக்கு பாதிப்பு இல்லை

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி

வவுனியா, ஜன. 17

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தபோதும் அங்குள்ள தடுப்பூசிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் குளிரூட்டியில் வைக்கப்படவேண்டிய தடுப்பூசிகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்ற சந்தேகம் நிலவியது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே சுகாதார வைத்திய அதிகாரி-

சுமார் இரண்டு மணி நேரம் மாத்திரமே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. எம்மிடம் உள்ள குளிரூட்டிகள் 24 மணித்தியாலம் மின்சாரம் தடைப்பட்டாலும்கூட பாதுகாக்கக்கூடிய வசதி கொண்டவையாக காணப்படுகின்றன. எனவே இங்குள்ள தடுப்பூசிகள் எந்த விதத்திலும் பழுதடைவதற்கு சந்தர்ப்பமில்லை.

பொதுமக்கள் எவ்வித ஐயமும் இன்றி குறித்த தடுப்பூசிகளை பயன்படுத்தலாம் - என்றார். (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.01.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ்நாட்டினது தலையிடும் எல்லை

ஈழத் தமிழர் அரசியலில் முன்னோக்கி பயணிப்பதற்கு தமிழ் நாட்டை கையாள வேண்டும் என்னும் கருத்து நீண்டகாலமாக இருந்து வரும் ஒரு கருத்து - முக்கியமாக புதுடில்லியை ஈழத் தமிழர் பக்கமாக திருப்பவேண்டும் என்றால் அதற்கு தமிழ்நாட்டை ஈழத் தமிழர் பக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தும் தமிழ் தேசியர்கள் என்போரின் நம்பிக்கையாக இருகின்றது. இது எஸ்.ஜே.வி.செல்வநாயகம் காலம் தொடக்கம் தொடரும் ஒரு கருத்துத்தான். அன்றைய சூழலில் தமிழ் நாட்டின் அரசியல் அடையாளமாக இருந்த ஈ.வே.இராமசாமி நாயக்கரை (பெரியார்) செல்வநாயகம் சந்தித்து பேசிய வேளையில், இராமசாமி நாயக்கர் இவ்வாறு கூறியிருந்தார் - எங்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கே நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம் - நீங்களோ எங்களிடம் உதவி கேட்டு வந்திருக்கின்றீர்கள்.

தமிழர் அரசியல் ஆயுதப் போராட்டமாக உருமாறிய காலத்தில் அனைத்து ஆயுத இயக்கங்களினதும் பின்தளமாக தமிழ் நாடே இருந்தது. ஆரம்பத்தில் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும் கட்சி பேதங்களை கடந்து ஆயுத இயங்கங்களுக்கு அடைக்கலம் வழங்குபவர்களாகவே இருந்தனர். தமிழ் நாட்டின் முதலமைச்சர்களாக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய நிதியுதவியே புலிகளின் அடுத்த கட்டத்திற்கு பக்கபலமாக இருந்தது. அதேபோன்று கருணாநிதி ரெலோவுக்கு அரணாக இருந்தார். ஆனால், தமிழ் நாட்டில் வைத்து. ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்ட பின்னணியில் நிலைமைகள் தலைகீழாகின. அதன் பின்னர் தமிழ் நாட்டின் ஈழ ஆதரவின் தன்மையிலும் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டன.

இன்று ஈழத் தமிழர் விவகாரம் எவ்வாறு புதுடில்லியால் அவ்வப்போது உச்சரிக்கப்படுகின்றதோ - அதேபோன்றுதான் தமிழ் நாட்டின் பிரதான கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகள் அவ்வப்போது ஈழத் தமிழர் விவகாரத்தை உச்சரித்துக் கொள்கின்றன. ஆரம்பத்திலிருந்தே இந்தியாவை அணுகும் விடயத்தில் தமிழ்நாட்டை மிகைப்படுத்தி நோக்கும் போக்கே தமிழ் தேசியர்கள் என்போரிடம் இருந்தது. ஈழம் - தமிழ் நாடு - புலம்பெயர் சமூகம் என்னுமடிப்படையில் ஈழத்தமிழர்கள் ஒரு தேசமாக திரளவேண்டும் என்னும் கற்பனைக் குதிரைக்கு கடிவாளமிட்ட புத்திஜீவிகள் என்போர் ஈழத் தமிழர் சமூகத்தில் இருந்தனர். இன்று திரும்பிப் பார்த்தால் இவ்வாறானவர்களது ஆய்வுகள் அவமானகரமாகத் தோல்விடைந்துவிட்டமை வெள்ளிடைமலை.

இந்திய அயலுறவுக் கொள்கையை தீர்மானிப்பதில் இந்தியாவின் மாநிலங்களுக்கு பெரியளவில் முக்கியத்தும் இல்லை - அதிலும் இந்தியாவின் ஏனைய மாநிலங்களோடு ஒப்பிட்டால் தமிழ் நாடு இந்த விடயத்தில் பின்னுக்கே இருக்கின்றது - காரணம் தமிழ் நாட்டின் பிரதான கட்சிகள் ஹிந்தி எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு என்னும் கோஷங்களை உள்ளூர் அரசியலாகக் கொண்டிருப்பதால், வடக்கு அரசியல் சமூகம் தமிழ் நாட்டை எப்போதும் சந்தேகத்துடன் நோக்கும் போக்கே காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் நாட்டிலிருந்து முன்வைக்கப்படும் ஈழத் தமிழர் சார்ந்த கோரிக்கைகளையும் சந்தேகத்துடனேயே இந்தியாவின் வடக்கு அரசியல்வாதிகள் நோக்குகின்றனர். இந்தப் பின்னணியில்தான் தமிழ் நாட்டினால் ஆகக் குறைந்த விடயங்களில் கூட தாக்கம் மிக்க தலையீடுகளை இதுவரையில் செய்ய முடியவில்லை. நிலைமை இவ்வாறிருக்க தமிழ் நாட்டு முதலமைச்சருடன் செல்பி எடுத்துக் கொள்வதற்கு மல்லுக்கட்டும் ஈழத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, இப்போதும் அரசியலில் குழந்தைகளாகவே இருக்கின்றனர்.

ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் தமிழ் நாட்டால் எதனையும் செய்ய முடியாது - இதற்குமப்பால் தமிழ் நாட்டால் ஒரு பங்களிப்பை வழங்க முடியுமென்றால் - ஒன்றைச் செய்ய முடியும் அதாவது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இந்திய மத்திய அரசு தார்மீகத் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் நாடு கோர முடியும். அவ்வாறு கோருகின்ற போது, மத்திய அரசுக்கு அது சாதகமான விடயமாக இருக்கும். ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் என்போர் இனியாவது மூளையை பயன்படுத்துபவர்களாக இருப்பார்களா?




# வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற கோமாதா வழிபாடும் பொங்கலும்

வவுனியா, ஜன.17

விவசாயிகளுக்கு உதவும் மாடுகளுக்கு நன்றி தெரிவித்து வவுனியாவில் நேற்று முன்தினம் கோமாதா வழிபாடும், மாட்டுப் பொங்கலும் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயம் மற்றும் வவுனியா கந்த சுவாமி ஆலயம் என்பவற்றில் மாட்டுப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது.

(எ-10)

# கிளீன் சிறீலங்கா திட்டம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு கருத்தரங்கு

முல்லைத்தீவு, ஜன.17

முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு 'தூய்மையான இலங்கை'- கிளீன் சிறீலங்கா திட்டம் தொடர்பில் தெளிவூட்டல் கருத்தரங்கு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, "ஒரு செழிப்பான தேசம் ஓர் அழகான வாழ்க்கை" என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய 'தூய்மையான இலங்கை' திட்டம் தொடர்பில் அரசாங்க அதிபரால் தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கின் முக்கிய நோக்கமாக அரச உத்தியோகத்தர்களுக்கு கிளீன் சிறீலங்கா என்றால் என்ன? என்பதை தெளிவூட்டுவதுடன் அரச பணியை உத்தியோகத்தர்கள் திறப்பட மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

மேலும் அனைத்துத் துறைகளிலும் சமூகம், சுற்றுச்சூழல், நெறிமுறை சார்ந்து சரியான மாற்றங்களைக் கொண்டுவந்து அரச உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை திறம்பட ஆற்றி மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெளிவுபடுத்தப்பட்டது.

(எ)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா கலைநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன.17

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா கலைநிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை மாலை 05. 00 மணிக்கு இலக்கம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக கிராமிய நடனம், ஒயிலாட்டம், 'பவளத்தேர்' இசைநாடகம் போன்றவற்றுடன் 'சமூக ஊடகங்கள் இன்று மக்களை அறிவுடையோராக்குகின்றன - அடிமைப்படுத்துகின்றன' என்னும் தலைப்பிலான பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

(எ)

# இரணைமடு நீர்த்தேக்கத்துக்கு நன்றி செலுத்தும் பொங்கல்!



கிளிநொச்சி,ஜன.17


இரணைமடு நீர்த்தேக்கமானது, நீர்ப்பாசனத்துக்காக திறந்து வைக்கப்பட்டு 105 ஆண்டுகள் நிறைவையொட்டி நன்றி செலுத்தும் பொங்கல் விழா நேற்று நடைபெற்றது.

காலை 09.00 மணியளவில் இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் தலைமையில் கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாயபீட மாணவர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


சமய நிகழ்களைத் தொடர்ந்து பிரதான பொங்கல் பானைகள் வைக்கப்பட்டு பொங்கல் நிகழ்வு நடைபெற்றது.

(எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
அனாவசிய செலவுகளை குறைக்க பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு.

**கன்னி**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்ப தால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பமடைவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறி வீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

# யாழில் வேலையில்லாப் பட்டதாரிகள் வித்தியாசமான முறையில் போராட்டம்



யாழ்ப்பாணம்,ஜன.17

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்னைகளையும் கோரிக்கைகளையும் மக்கள் மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நேற்றுக் காலை 09.30 மணியளவில் யாழ். நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றிணைந்து மேற்கொண்ட இந்த விழிப்புணர்வு செயல் திட்டத்தில் துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துக்களை உள்வாங்கல் போன்ற நிகழ்வுகள், பட்டதாரிகளின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் முன்னெடுக்கப் பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு உலகத்தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபி முன்றலில் காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகியது. அதனைத்தொடர்ந்து யாழ். நகர்ப்பகுதிக்குள் பேரணி இடம்பெற்றதுடன், பட்டம் பெற்றுவிட்டு தாங்களும் சாதாரண வேலைகளைத்தான் செய்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக வீதியைக் கூட்டுதல், குப்பை வண்டியை தள்ளுதல் போன்ற செயல்பாடுகளை முன்னெடுத்தனர்.(எ- 05)

# சாவகச்சேரியில் மாபெரும் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜன.17

விதையனைத்தும் விருட்சமே செயல்திட்டம் ஊடாக, அண்மையில் மீளத் திறக்கப் பட்ட சாவகச்சேரி மருத்துவ மனையின் இரத்த வங்கியை சிறந்த முறையில் செயல்பட வைக்கும் நோக்கில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விதையனைத்தும் விருட்சமே செயல்திட்டத்தின் இந்த 42ஆவது இரத்த தான முகாமை நாளை மறுதினம் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 08.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையின் இரத்த வங்கியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரத்ததானம் செய்வதற்கு ஆர்வமுள்ள கொடையாளர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 0773241755 அல்லது 077298 8917 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(எ- 05)

# வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளராக முகுந்தன் கடமைகளை பொறுப்பேற்றார்

வவுனியா, ஜன.17

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு இடையிலான இடமாற்றத்தை அடுத்து வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளராக த. முகுந்தன் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதுவரை காலமும் வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திருமதி சு. அன்மலர், துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் வடமாகாண கல்வித் திணைக் களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய த. முகுந்தன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-10)

# மர்ம வீட்டிலிருந்த 18 புத்தர் சிலைகள் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.17

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் கரையொதுங்கிய மர்ம வீட்டிலிருந்த 18 புத்தர் சிலைகளை பொலிஸார் மீட்டு மருதங்கேணி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

குறித்த வீட்டில் பௌத்த மதத்தை பிரதிபலிக்கும் பல மரபு அம்சங்கள் இருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற மருதங்கேணி பொலிஸார் அந்த வீட்டில் இருந்த 18 புத்தர் சிலைகளையும் செப்பேடுகளையும் மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.(எ- 05)





வவுனியா, தாண்டிக்குளம் ஐயனார் ஆலயத்தில் சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லின் உத்தரவாத விலை வர்த்தமானி அடுத்த வாரம்!

## அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, ஜன. 17

**நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பிலான வர்த்தமானி எதிர்வரும் வாரம் பிரசுரிக்கப்படும்.விவசாயிகளையும், நுகர்வோரையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வருடாந்தம் 40 இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில் அவற்றில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான நெல்லே அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து சுமார் 5000 மெற்றிக் தொன் அரிசியே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நெல்லை கொள்வனவு செய்து அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் வசதி அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

இவ்வாறான காரணிகளால் தான் தற்போது அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நெற்களஞ்சியசாலைகளை புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இம்முறை பெரும்போக அறுவடையின்போது விவசாயிகளிடமிருந்து 3 இலட்சம் மெற்றிக் தொன் வரையிலான நெல்லை கொள்வனவு செய்வோம்.

நெல்லுக்கான உத்தரவாத விலை மற்றும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பிலான வர்த்தமானி எதிர்வரும் வாரம் பிரசுரிக்கப்படும்.விவசாயிகளையும், நுகர்வோரையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு நிலையான தீர்வு காண்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம். விவசாயி களிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்து அதனை அரிசியாக்கி சாதகமான விலைக்கு சந்தைக்கு விநியோகிப்பதற்கான திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளோம்-என்றார். (அ)

# மான், மரை கொம்பு விற்க முயன்ற மாணவன் உட்பட நால்வர் கைது!

கொழும்பு, ஜன. 17

சட்டவிரோதமான முறையில் மான், மரை கொம்புகள் மற்றும் தடை செய்யப்பட்ட சங்கு வகைகள் என்பவற்றை 13 இலட்சம் ரூபா வுக்கு விற்பனை செய்ய முயற்சித்த பாடசாலை மாணவன் உட்பட நால்வர் அளவ்வ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.



விமானப்படை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, புத் தளம் - கருவலகஸ்வெவ மற் றும் குருநாகல் வனவிலங்கு உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்ட கூட்டு நடவடிக்கையின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் உடவளவ, கேகாலை, தெனாலேகம மற்றும் கட்டுநாயக்க ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனும் இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, ஒன்பது அடுக்கு மான் கொம்பு, ஒரு அடுக்கு ஒற்றை மான் கொம்பு, மரை கொம்பு, எருமை கொம்பு மற்றும் விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்ட சங்குகள், சந்தேக நபர்கள் பாவித்த கைத்தொலைபேசிகள், சந்தேக நபர்கள் பயணிப்பதற்கு பயன்படுத்திய சொகுசுக் கார் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

# பொலிஸ் வாகன கொள்வனவுக்கு இலங்கைக்கு இந்தியா மானியம்!



கொழும்பு, ஜன. 17

மானியத்தின் கீழ் இலங்கை பொலிஸாரால் பயன்படுத்தப்படும் வாகனங்களை இந்தியா வழங்கும் எனக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி செனவிரத்ன ஆகியோர் இலங்கை ரூபா 300 மில்லியன் பெறுமதியான மானிய உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு குறைந்தபட்சம் 80 ஒற்றை கெப் ரக வாகனங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பொருட்களை வழங்குவது, குடிமக்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது தொடர்பான இலங்கை காவல்துறையின் முக்கிய தேவையை இந்த திட்டம் நிவர்த்தி செய்யும்.

இலங்கை மக்களின் தேவைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான இந்தியாவின் மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தி ஒத்துழைப்பு முயற்சிகள், வீடமைப்பு போன்ற துறைகளில் நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள மக்களின் அன்றாட வாழ்வில் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.


சுகாதாரம், கல்வி, மீன்பிடி, போக்குவரத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாழ்வாதாரம், விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் என தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கை பிரதமரிடம்!

கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு தொடர்பான இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவினர் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கையளித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோரினால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கண்காணிப்பு இறுதி அறிக்கை நேற்று வியாழக்கிழமை பிரதமரிடம் கையளிப்பட்டது.



எதிர்காலத் தேர்தல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான முக்கிய பரிந்துரைகள் மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்கான எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஓட்டோக்களில் சட்டபூர்வமாக பொருத்தப்பட்ட பாகங்களை அகற்றுவதைத் தடுக்க இணக்கம்!

கொழும்பு, ஜன. 17

ஓட்டோக்களில் சட்டபூர்வமாகப் பொருத்தப்பட்ட பாகங்களை அகற்றுவதைத் தடுப்பதற்கும், சட்டவிரோத மேலதிக பாகங்களை அகற்றுவதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபருக்கும், அகில இலங்கை ஓட்டோ உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, ஓட்டோக்களில் மேலதிகமாக உதிரிப்பாகங்களைப் பொருத்துவதற்கான சட்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் சட்டப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த சட்ட கட்டமைப்பை அனைத்து தரப்பினரும் பாதுகாக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு மீண்டும் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பிரதி பொலிஸ்மா அதிபர் ருவன் குணசேகர தெரிவித்தார். (அ)

# மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அபகீர்த்தி ஏற்படுத்திய இருவரும் மீண்டும் மறியலில்!

கொழும்பு, ஜன. 17

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியமை மற்றும் கத்தோலிக்க மக்களை சீண்டும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளரான நாமல் குமார மற்றும் அசேல நுவன் ராஜபக்ஷ ஆகியோர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று முன் தினம் கொழும்பு - கோட்டை நீதவான் நிலுபுலீ லங்காபுர முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதன்போது, சந்[illegible]ளின் கையடக்கத் தொலைபேசி தரவுகளைப் பெற்றுக் கொள்ள அனுமதியளிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு விடுத்த கோரிக்கைக்கு நீதவான் அனுமதியளித்துள்ளார்.

அதேநேரம், நாமல் குமாரவை சிறைச்சாலை ஊடாக வாக்குமூலம் வழங்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# கடந்த வருடத்தில் மட்டும் 24,761 சுற்றிவளைப்புக்கள்

கொழும்பு, ஜன. 17

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் கடந்த வருடம் 24761 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்த சுற்றி வளைப்புக்கள் தொடர்பில் 23,953 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார். அவற்றுள் நிறைவுறுத்தப்பட்ட வழக்குகளுக்காக நீதவான் நீதிமன்றங்களினால் 207 மில்லியன் ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது வழக்கு தொடரப்படாத சுற்றி வளைப்புகளுக்காக விரைவில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லின் உத்தரவாத விலையை அரசு உடனே அறிவிக்கவேண்டும்!

## ஆலை உரிமையாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 17

**நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசாங்கம் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யூ. கே. சேமசிங்க இந்த கோரிக்கையை விடுத்தார்.

கால்நடை தீவனத்துக்காகப் பச்சை அரிசியைப் பயன்படுத்தியமையே அதன் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் உரிய கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பச்சை அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, அரசாங்கம் அடுத்த போகத்திற்கு முன்னர் நெல்லுக்கான உத்தரவாத விலை அறிவிக்கவேண்டும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் வலியுறுத்தினார். (அ)

# போதைப்பொருட்களுடன் பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஜன. 17

கொஹூவலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுபோவில பிரதேசத்தில் போதைப் பொருட்களுடன் பெண் உட்பட மூவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

களுபோவில பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனும் 54 வயதுடைய பெண்ணொருவரும் வெல்லம்பிட்டிப் பகுதியை சேர்ந்த் 56 வயதுடைய நபரொருவருமே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிலோ 594 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் , 04 கிலோ கிராம் கேரள கஞ்சா போதைப்பொருள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கல்கிசை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுத்த கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# 2025 ஹஜ் உடன்படிக்கையில் இலங்கை அரசு கைச்சாத்து!



கொழும்பு, ஜன. 17

சவூதி அரேபியாவின் ஜெட்டாவில் ஹஜ் யாத்திரைக்கான ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டது.

இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சுனில் செனவி மற்றும் சவூதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா பிரதி அமைச்சர் கலாநிதி அப்துல்பத்தா பின் சுலைமான் மஷாத் தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் இலங்கை முஸ்லிம்களின் புனித யாத்திரை அனுபவத்தை மேம்படுத்துவதில் இரு அரசாங்கங்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

சவூதி ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சரின் அழைப்பின் பேரில் அமைச்சர் செனிவி சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்கு முந்திய இருதரப்பு சந்திப்பின்போது, தனது குடிமக்களுக்கான ஹஜ் யாத்திரை அனுபவத்தை மேம்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் கவனத்தை அமைச்சர் செனிவி வலியுறுத்தினார். (அ)

# ஜனாதிபதி அநுரவின் சீன விஜயத்தின் பயனாக 3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடு



கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இலங்கைக்கு கிடைத்த பாரிய முதலீட்டை குறிக்கும் வகையில், இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சீனாவின் சினோபெக் முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைசாத்திடும் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கீழ், அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 2 இலட்சம் கொள்ளளவுடைய எண்ணெய் தாங்கிகளை கொண்டுள்ளதுடன், அவற்றில் பெருமளவான தொகையை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென் ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாகாண சபைகளுக்கு சொந்தமான 2000 வாகனங்களைக் காணவில்லை!

கொழும்பு, ஜன. 17

மாகாண சபைகளுக்கு சொந்தமான சுமார் 2000 வாகனங்களுக்கும் அதிகமான வாகனங்கள் அண்மைய தினங்களில் காணாமல்போயுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு காணாமல் போயுள்ள வாகனங்களுள் வெவ்வேறான அதிசொகுசு கார் மற்றும் ஜீப் வண்டிகள் உள்ளடங்குவதாக தெரியவருகிறது.

மாகாண சபைகளில் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் அவ்வப்போது காணாமல்போயுள்ள நிலையில் குறித்த வாகனங்கள் தொடர்பிலான தகவல்களை கண்டறிய தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, மாகாண முதலமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிசொகுசு வாகனங்கள் அரசியல்வாதிகளுக்கு நெருக்கமான அதிகாரிகள் பயன்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய மாகாண சபைக்குச் சொந்தமான சுமார் 31 வெவ்வேறு வாகனங்கள் தொடர்பான தகவல்கள் தணிக்கைக்கு வெளியிடப்படவில்லை என்று அறிக்கை கூறுகிறது.

தென் மாகாண சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட 201 வாகனங்களின் பௌதீக இருப்பு தொடர்பில் தகவல்கள் வெளியிடப்படவில்லை என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவருடன் ஜனாதிபதியின் செயலருடன் சந்திப்பு



கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமெரி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக இந்த சந்திப்பில் தூதுவர் தெரிவித்தார்.ஐக்கிய அரபு இராச்சிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தற் பொழுதுள்ள புதிய அரசியல் போக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியுள்ளது என்று சுட்டிக் காட்டிய தூதுவர், கடந்த காலங்களில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழல் இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுவதாகவும் எதிர்காலத்தில் இந்த வேலை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தவும் இலங்கை நிபுணர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் காலித் நாசர் அல் ஆமேரி தெரிவித்தார்.

இலங்கையுடனான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த ஐக்கிய அரபு இராச்சியம் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத்தில் இது தொடர்பாக புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள விரும்புவதாகவும் தூதர் தெரிவித்துள்ளார்.மேலும் ஐக்கிய அரபு இராச் சியத் தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான சந் திப்புக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்த தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த இது வாய்ப்பாக இருக்கும் என்றும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸிலை நெருங்கும் புலனாய்வுத் துறை!

## உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 17

**முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் சொத்துக்கள் குறித்த உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.**

இந்த விசாரணையின் ஒரு பகுதியாக கடந்த காலத்தில் பஸில் ராஜபக்ஷவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிவந்த தொழிலதிபர்கள் மற்றும் நண்பர்களிடம் புலனாய்வுத் துறை விரிவான விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

அத்துடன், பஸில் ராஜபக்ஷவுடன் தொடர்புடைய சொத்துக்கள் குறித்தும் பாதுகாப்புப் படையினரும் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்காவில் எவ்வித தொழிலும் செய்யாத பஸில் ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவில் எவ்வாறு பாரியளவான சொத்துகள் உள்ளன என்றும் அமெரிக்காவில் வசிக்கும் பஸில் ராஜபக்ஷவின் உறவினர்களுக்கும் பாரிய சொத்துக்கள் இருப்பதாகவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பில் வாக்குமூலமொன்றை குற்றப்புலனாய்வு பிரிவு அண்மையில் விமல் வீரவன்ஸவிடம் பெற்றிருந்தது. இந்தப் பின்புலத்திலேயே தற்போது புலனாய்வு விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் அமெரிக்காவுக்குச் சென்ற பஸில் ராஜபக்ஷ, பொதுத் தேர்தலின் போதுகூட நாடு திரும்பியிருக்கவில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை வழிநடத்தும் பொறுப்பும் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் கையளிக்கப்பட்டுள்ளதால் பஸில் ராஜபக்ஷ எப்போது நாடு திரும்புவார் என தமக்கே தெரியாதென பொதுஜன பெரமுனவின் தகவல் அறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# நாட்டில் அரிசித் தட்டுப்பாடு குறித்து அமைச்சருடன் விவாதத்துக்கு தயார்!

## தேசிய விவசாய ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20 கிலோகிராம் பச்சையரிசியை இலவசமாக விநியோகித்ததால் சந்தையில் சிவப்பு அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிடுவது முற்றிலும் பொய். அரிசித் தட்டுப்பாடு தொடர்பில் அமைச்சருடன் பகிரங்க விவாதத்தில் ஈடுபட தயார் என தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. புத்தாண்டுக்கும் சிவப்பரிசி இல்லை, பொங்கல் பண்டிகைக்கும் சிவப்பரிசி இல்லை.

விவசாயம் செழிப்பதற்காகவே இந்துக்கள் புத்தரிசியில் பொங்கல் பொங் குவார்கள். ஆனால் இம்முறை பெரும்பாலான பகுதிகளில் சிவப்பரிசிக்கு தட்டுப்பாடு நிலவியது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 20 கிலோ கிராம் சிவப்பு அரிசியை நாட்டு மக்களுக்கு இலவசமாக விநியோகித்ததால் சந்தையில் சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது.

அரிசி தட்டுப்பாடு தொடர்பில் அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிடும் விடயங்கள் முற்றிலும் பொய்யானவை. பிரதான அரிசி உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அடிபணிந்துள்ளது -என்றார். (அ)

# வெறும் 42 வினாடிகளில் விற்று தீர்க்கப்பட்ட ரயில் ரிக்கெற்றுகள்

## சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 17

இலங்கையில் உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமான எல்லவுக்குச் செல்லும் ரயில்களுக்கான இ-ரிக்கெற்றுகள் மிக விரைவாக விற்பனை செய்யப்பட்டதன் பின்னணியில் சந்தேகிக்கப்படும் சதி குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட 42 வினாடிகளுக்குள் அனைத்து ரிக்கெற்றுகளும் விற்றுத் தீர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, 2,000 ரூபா விலையில் இருந்த ரிக்கெட்டுகள் வெளிநாட்டினருக்கு 16,000 ரூபா வரை மறுவிற்பனை செய்யப்பட்ட சம்பவங்களை எடுத்துரைத்தார்.

கொழும்பு கோட்டை-கண்டி மற்றும் கொழும்பு கோட்டை-எல்ல ரயில் வழித்தடங்களுக்கும் இதே போன்ற வழக்குகள் பதிவாகியுள்ளன, அங்கு டிக்கெட்டுகள் அதிக விலைக்கு மறுவிற்பனை செய்யப்படுகின்றன என்று அவர் வெளிப்படுத்தினார்.

ஜனவரி 15 அன்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதி அமைச்சர், இந்தப் பிரச்னை தற்செயலாக இருக்க வாய்ப்பில்லை என்று கூறினார்.

ஒவ்வொரு முறையும் ஒரு மாதத்திற்கு முன்பே ஈ-ரிக்கெற்றுகள் வெளியிடப்படும்போது, அவை சில நொடிகளில் விற்றுத் தீர்ந்துவிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

மேம்பட்ட கணினி நிபுணத்துவம் பெற்ற தனிநபர்கள் அல்லது குழுக்கள் இந்த நடவடிக்கையை திட்டமிட்டு நடத்தக்கூடும் என்று அமைச்சர் சந்தேகிக்கிறார்.

மேலும் சுரண்டலைத் தடுக்க நிலைமையை அவசரமாக நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

அதிக விலைக்கு ரிக்கெற்றுகளை வாங்கிய நபர்கள் இது போன்ற மோசடி நடவடிக்கைகள் குறித்த விசாரணைகளை எளிதாக்க சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.இருப்பினும், ரிக்கெற் மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் முன்வர விரும்பாத போது விசாரணைகளைத் தொடர்வதில் உள்ள சவாலை அவர்கள் ஒப்புக்கொண்டனர். (அ)

# அர்ச்சுனாவை தகுதி நீக்கும் வழக்கு: 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்த மன்று

கொழும்பு, ஜன. 17

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தெரிவான இராமநாதன் அர்ச்சுனாவை, பாராளுமன்ற உறுப்பினராக தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை நேற்று முன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றம் ஜனவரி 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மஹேன் கோபல்லவ, மேல்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முறையாக அமைக்கப்படாததால் இந்த வழக்கை ஜனவரி 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத், இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கும் குவோ வாரண்டோ ரிட் வகையிலான உத்தரவைக் கோரி இந்த மனுவை தாக்கல் செய்தார். அர்ச்சுனா சுகாதார அமைச்சுடன் இணைக்கப்பட்ட ஒரு பொது அதிகாரி என்றும், எனவே, ஒரு பொது அதிகாரியாக, அவருக்கு அரசுடன் ஒப்பந்தம் இருப்பதாகவும் மனுதாரர் கூறினார்.

அரசியலமைப்பின் பிரிவு 91(1)(ஈ) பொது ஒப்பந்தங்களில் ஏதேனும் ஆர்வமுள்ள நபர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தடுக்கிறது என்று மனுதாரர் கூறினார்.

அர்ச்சுனா சாவகச்சேரி அடிப்படை மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகராக செயல்பட்டதாகவும், பின்னர் பேராதனை போதனா மருத்துவமனைக்கு இணைக்கப்பட்டதாகவும் மனுதாரர் மேலும் கூறினார். செப்ரெம்பர் 29, 2024 அன்று அல்லது அதற்கு முந்தைய திகதியில், வைத்தியர் அர்ச்சுனாவின் பேஸ்புக் சுயவிவரம், அப்போதைய சுகாதார அமைச்சின் செயலாளரால் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டதாக பகிரங்கமாக வெளிப்படுத்தியதாக மனுதாரர் கூறினார்.

எனவே, அரசியலமைப்பின் பிரிவு 91(1)(டி) மற்றும் 91(1)(ஈ) இன் கீழ் ர் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியற்றவர் என்று மனுதாரர் கூறினார்.

மனுதாரர் சார்பாக ஷெனல் பெர்னாண்டோவுடன் சட்டத்தரணி என்.கே.அசோக்பரன் ஆஜரானார். (அ)

# பாராளுமன்றக் குழுக்களை புறக்கணிப்பது அரசின் முடிவுகளுக்கு அமையவே நடக்கும்!

கொழும்பு, ஜன. 17

அரசாங்கத்தின் முடிவுகளுக்கமையவே எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற குழுக்களைப் புறக்கணிப்பது என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எட்டப்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றக் குழுக்களைப் புறக்கணிப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்-தற்போதைய அரசாங்கம் தன்னிச்சையாக செயற்பட்டுவருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் இது ஜனநாயக வழிமுறை அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# 18 நாள்கள் மூடப்படும் மதுபானச்சாலைகள்!

கொழும்பு, ஜன. 17

2025 ஆம் ஆண்டில் மதுபானச்சாலைகள் மூடப்பட வேண்டிய திகதிகள் குறித்து கலால் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு மதுபானசாலைகள் 18 நாள்களுக்கு மூடப்படும் என்று குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2025 ஜனவரி 13 - பௌர்ணமி போயா தினம்2025 பெப்ரவரி 04- சுதந்திர தினம்

2025 பெப்ரவரி 12 - பௌர்ணமி போயா தினம்2025 மார்ச் 13 - பௌர்ணமி போயா தினம்

2025 ஏப்ரல் 12 - பௌர்ணமி போயா தினம்2025 ஏப்ரல் 13- சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முந்தைய நாள்2025 ஏப்ரல் 14 -சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினம்

2025 மே 12 - வெசாக் பௌர்ணமி போயா தினம்2025 மே 13 - வெசாக் பௌர்ணமி போயா தினத்திற்கு அடுத்த நாள்2025 ஜூன் 10 - பொசன் பௌர்ணமி போயா தினம்2025 ஜூலை 10 - பௌர் ணமி போயா தினம்2025 ஓகஸ்ட் 08 - பௌர்ணமி போயா தினம்

2025 செப்ரெம் பர் 07 - பௌர்ணமி போயா தினம்

2025 ஒக்ரோபர் 03 2025 - உலக மதுவிலக்கு தினம் 2025 ஒக்ரோபர் 06 - பௌர்ணமி போயா தினம்

2025 நவம்பர் 05 - பௌர்ணமி போயா தினம்

2025 டிசெம்பர் 04- உந்துவப் பௌர்ணமி போயா தினம்

2025 டிசெம்பர் 25 - கிறிஸ்துமஸ் தினம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மழையால் வயல்கள் நாசம்!

## விவசாயிகள் வேதனை, நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

சம்மாந்துறை,ஜன.17

**அம்பாறை டி. எஸ். சேனநாயக்க நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவு திறந்து விடப்பட்ட நிலையிலும் இடைவிடாத மழை வீழ்ச்சி காரணமாகவும் பெரும்போக வேளாண்மை செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**



அம்பாறை மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்து வருவதுடன் சில இடங்களில் வெள்ளம் தேங்கி காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக தாழ் நிலங்களும் வயல் நிலங்களும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சவளக்கடை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதியில் 2000 ஏக்கருக்கும் அதிகமாக நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளன. இதே வேளை, சவளக்கடை, அன்னமலை, வேப்படி, 5ஆம் கொலனி போன்ற பல்வேறு பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது வேளாண்மை 70 நாட்கள் பயிராக காணப்படுவதனால், குடலைப்பருவத்தில் இருந்து கதிர்பருவத்துக்கு மாறும் இவ் வேளையில் அதிகரித்த மழை வீழ்ச்சி மற்றும் குளங்களிலிருந்தும் நீர் திறந்து விடப்பட்டுள்ளதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறினர். இந்த நிலையில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தால் தாம் பாதிக்கப்பட்டு மீண்டெள முடியாத நிலையில் இருக்கும் வேளையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அடுத்த வெள்ளமும் தம்மை அதிகம் பாதித்துள்ளதாகவும் விவசாயிகள் வேதனை வெளியிட்டுள்ளனர்.

நெல்லுக்கான உத்தரவாத விலையை இன்னும் நிர்ணயிக்காத நிலையில் தாம் எதிர்பார்த்த விளைச்சலை பெறுவதிலும் சிக்கல் நிலவுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# சாய்ந்தமருது பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

சாய்ந்தமருது, ஜன.17

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் பிரதேச செயலாளர் எம். எம் ஆசிக் ஏற்பாட்டில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எஸ் உதுமாலெப்பை, எம். நிஸாம் காரியப்பர், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.டி.எம். ராபி, மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர், உதவி பிரதேச செயலாளர் என்.எப்.அய்மா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, திணைக்களத் தலைவர்கள் பிரதிநிதிகள், மத ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்தில்சுகாதாரம், கல்வி,காணி விளையாட்டு நீர்ப்பாசனம், கடலரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் மீனவர்கள் எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டன. (எ)

# காரைதீவில் பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பில் நடமாடும் சேவை

காரைதீவு,ஜன.17

மனித அபிவிருத்தி ஸ்தாபனமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து புலம்பெயர் தொழிலுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து பாதுகாப்பான புலம் பெயர் தொழில் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பான நடமாடும் சேவை ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளன.

இந்த நடமாடும் சேவை காரைதீவு பிரதேச செயலாளர் ஜி. அருணன் தலைமையில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி முதல் பிற்பகல் 03. 30 மணிவரை காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதனை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார். (எ)

# ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு



நிந்தவூர்,ஜன.17

சிலோன் மீடியா போரத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற "நிர்வாக சேவை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் ஒன்றிணைவும், கௌரவிப்பும்" நிந்தவூர் தோம்புகண்டம் விடுதியில் நடைபெற்றது.


சிலோன் மீடியா போரத்தின் செயலாளர் எம். எஸ். எம்.முஜாஹித், பொருளாளர் நூருல் ஹுதா உமர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் தலைவர் ரியாத் ஏ. மஜீட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், பதவி உயர்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சமூர்த்தி உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் நினைவு சின்னங்கள், பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம். அப்துல்லாஹ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# சட்டவிரோதமாக மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரிக்கை

திருகோணமலை, ஜன.17

சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண மீனவர் சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாண மீனவர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்தச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அவற்றுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஆளுநர் கூறினார். (எ)

# மனிதப் பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்கள் பறிமுதல்

## உணவகங்களை மூட அறிவுறுத்தல்

சாய்ந்தமருது,ஜன.17

திடீர் களப்பரிசோதனையின்போது மனிதப் பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் உணவகங்களை மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இடங்களில் உள்ள உணவகங்கள், பழக்கடைகள் மற்றும் வெதுப்பகங்கள் உள்ளிட்டவற்றில் திடீர் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் ஆலோசனைக்கு அமைய பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே. எம். நிஸ்தார் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான ஏ. வாசித் அஹமட், ஏ. எல். எம். அஸ்லம், டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதுஉணவு கையாளுதல், உணவகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமை, வியா பார சான்றிதழ் இன்மை, பாவ னைக்கு பொருத்தமற்ற உணவு வகைகள் போன்ற முறையற்ற செயல்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் இந்த திடீர் பரிசோதனையின் போது ஏழு உணவகங்கள்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு முறையான வியா பார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாத வியாபார நிலையங்களை குறித்த அனும திப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் வரை மூடி வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்று 2009ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப்பரீட்சை எழுதிய மற்றும் 2012ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நிந்தவூரில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் போர் நிறுத்தம் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்புதல்

டெல் அவிவ், ஜன.17

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால், காஸாவில் அமைதி நிலவுகிறது.**

இரு தரப்பு இடையே கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக போர் நீடித்து வந்தது. கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதியன்று, இஸ்ரேலுக்குள் புகுந்து நூற்றுக்கணக்கானோரை பணயக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர். இதையடுத்து, காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா, எகிப்து, கட்டார் உள்ளிட்ட நாடுகள் முயற்சித்து வந்தன.

இந்த நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேலிய பணயக்கைதிகளை பரிமாற்றம் செய்ய இரு தரப்பும் ஒப்புதல் தெரிவித்துள்ளது. இதன் மூலம் 15 மாதங்களாக நடைபெற்று வந்த காஸா போர் முடிவுக்கு வந்துள்ளது.(எ)

# முன்னாள் பிரதமர் கலிதா விடுதலை!

டாக்கா, ஜன.17

ஊழல் வழக்கில் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில் 1991-1996 மற்றும் 2001-2006 காலகட்டத்தில் பிரதமராக பதவி வகித்தவர் கலிதா ஜியா. இவர் தனது ஆட்சிக்காலத்தில் ஜியா ஆதரவற்றோர் அறக்கட்டளையின் பெயரில் அரசாங்க நிதியை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் கலிதா ஜியா, அவரது மகன் தாரிக் ரஹ்மான் உள்ளிட்ட 6 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், கலிதா ஜியாவுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், மற்றவர்களுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரும் உயர் நீதிமன்றில் மேல்முறையீடு செய்தனர். ஆனால், மேல்முறையீட்டு



மனுவை விசாரித்த நீதிமன்று கலிதா ஜியாவுக்கான தண்டனையை இரட்டிப்பாக அதிகரித்து - 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை உத்தர விட்டது.

இந்த நிலையில் அங்கு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக உயர் நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவான 10 ஆண்டு சிறைத்தண்டனையை உச்ச நீதிமன்றம் இரத்து செய்து உத்தரவிட்டது. அத்துடன் பழிவாங்கும் நோக்கில் வழக்குத் தொடரப்பட்டது நிரூபணமாகியிருப்பதாக கூறி கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து உத்தர விட்டது. (எ)

# உக்ரைனில் மின்சாரம் துண்டிப்பு

கீவ்,ஜன.17

ரஷ்யாவின் தாக்குதலைத் தொடர்ந்து உக்ரைனில் முன்னெச்சரிக்கையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பை தொடங்கிய ரஷ்யா கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது. சமீப காலமாக உக்ரைனின் உள்கட்டமைப்புகளை ரஷ்யா தாக்குகிறது.

அந்த வகையில், ரஷ்ய படைகள் உக்ரைனின் மின் உற்பத்தி மையங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு மையங்களை குறிவைத்து மிகப்பெரிய அளவில் ஏவுகணை தாக்குதலை தொடங்கியது. இதனால் பல இடங்களில் முன்னெச்சரிக்கையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை உக்ரைன் எரிசக்தி துறை அமைச்சர் ஹெர்மன் ஹலுசென்கோ தெரிவித்தார். உக்ரைன் மக்களை எதிரி (ரஷ்யா) தொடர்ந்து பயமுறுத்துவதாகவும் அவர் கூறினார். மக்கள் பாதுகாப்பாக, அந்தந்த பகுதிகளில் உள்ள தங்குமிடங்களில் தங்கியிருக்க வேண்டும் என்றும், அரசாங்கத்தின் அதிகாரபூர்வ அறிவிப்புகளை அறிந்து அதனை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (எ)

# ரஷ்ய தூதரகம் மூடப்படும் ஆஸி. பிரதமர் எச்சரிக்கை

சிட்னி, ஜன.17

ரஷ்ய தூதரகம் மூடப்படும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேட்டோ அமைப்புடன் இணைவதாக கூறிய உக்ரைன் மீது ரஷ்யா இராணுவம் தாக்குதல் நடத்தியது. 2022ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் போர் சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இருப்பினும் போர் தீவிரம் குறைந்தபாடில்லை.

இந்த நிலையில், அவுஸ்திரேலியாவை சேர்ந்தவர் ஆஸ்கர் ஜென்கின்ஸ் (வயது- 32). உக்ரைன் இராணுவத்தில் இணைந்து அங்கு போராடி வந்தார். போரில் ரஷ்யா இராணுவத்தினர் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். விசாரணையின் போது ஆஸ்கர் ஜென்கின்ஸ் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகின.



இதனையடுத்து, அவுஸ்திரேலியாவுக்கான ரஷ்ய தூதுவருக்கு அவுஸ்திரேலிய பிரதமர் அலுவலகம் அழைப்பாணை அனுப்பியது. நேரில் ஆஜரான ரஷ்ய தூதுவரிடம் பிரதமர் அன்ரனி அல்பானிஸ் முன்னிலையில் விசாரணை நடத்தினர். அப்போது, ஆஸ்கர் ஜென்கின்ஸின் நிலவரம் குறித்து ஆதாரங்களுடன் கேட்கப்பட்டது.

அவர் உயிரிழந்தி ருப்பது உறுதி செய்யப்பட் டால் ரஷ்ய தூதரகம் மூடப் பட்டு அதிகாரிகள் வெளியேற் றப்படுவர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# 3,600 ஊழியர்கள் பணி நீக்கம் மெட்டா நிறுவனம் தீர்மானம்

வாஷிங்டன்,ஜன.17

3,600 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய மெட்டா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஏ. ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு மீது உலகின் முன்னணி நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. இந்த நிலையில், பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வட்ஸ்-அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை நடத்தும் மெட்டா நிறுவுநர் மார்க் ஜூக்கர்பெர்க் தமது நிறுவனத்தில் பணியாற்றும் 3,600 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளார். மேலும், அவர்களுக்கு பதில் புதிய ஊழியர்களை பணியமர்த்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நிறுவனத்தின் கொள்கைகளை சீரமைக்கும் ஒரு பணியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பணித்திறன் மற்றும் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் பணிபுரியாத 5 சத வீதம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத்தீயால் 25 பேர் பலி

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன.17

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்துக்கு உட்பட்ட லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒரு வாரத்துக்கு மேலாக நீடித்து வரும் காட்டுத்தீயில் சிக்கி 25 பேர் பலியாகினர். 30 பேர் காணாமல் போயுள்ளனர். 12 ஆயிரம் கட்டடங்கள் முற்றிலும் சேதமடைந்து விட்டன. மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது.

இதனால், காட்டுத் தீயின் தீவிரம் அதிகரிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ)

# பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.மீது ராகுல் காந்தி கடும் தாக்கு



புதுடில்லி, ஜன.17

பா. ஜ. க., ஆர். எஸ். எஸ். நாட்டிலுள்ள அனைத்து நிறுவனங்களையும் கைப்பற்றியுள்ளன என்று இந்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராமர் கோவில் கட்டப்பட்ட பிறகு இந்தியா சுதந்திரம் அடைந்ததாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் கூறிய கருத்து தேசத்துரோகமாகும் என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டார்.

டில்லியில் காங்கிரஸ் தலைமை அலுவலகம் திறக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர், மிகவும் முக்கியமான நேரத்தில் புதிய தலைமை அலுவலகத்தைத் திறந்து வைத்துள்ளோம் என்றும் கூறினார். (எ)

# 3 போர்க்கப்பல்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார் பிரதமர் மோடி



மும்பை,ஜன.17

இந்தியக் கடற் படை பயன்பாட் டுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 3 போர்க் கப்பல்களை, மும்பை கடற்படை தளத்தில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப் பணித்தார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இந்தியா

## ஆடவர் அணியின் சாதனையை முறியடித்த இந்திய மகளிர் அணி




ராஜ்கோட், ஜன.17

அயர்லாந்துக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய மகளிர் அணி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் களமிறங்கிய இந்திய மகளிர் அணியில் தொடக்க வீராங்கனைகள் பிரதிகா ராவல் மற்றும் ஸ்மிருதி மந்தனா ஆகியோர் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை குவித்தனர். இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் அயர்லாந்து வீராங்கனைகள் தடுமாறினர். குறிப்பாக ஸ்மிருதி மந்தானா, அயர்லாந்து பந்துவீச்சை துவம்சம் செய்தார்.

39 பந்துகளில் தனது அரைச்சதத்தை மந்தனா பதிவு செய்தார். தொடர்ந்து அதிரடி காட்டிய அவர் 70 பந்துகளில் சதத்தை பதிவு செய்து அசத்தினார். இதன் மூலம் இந்திய மகளிர் கிரிக்கெட்டில் அதிவேகமாக சதம் அடித்த வீராங்கனை என்ற பெருமையை ஸ்மிருதி மந்தானா பெற்றார்.

மேலும் ஒருநாள் போட்டியில் ஸ்மிருதி மந்தனாவுக்கு இது 10ஆவது சதம் என்பதால் ஆசியாவில் அதிக சதங்கள் அடித்த இங்கிலாந்து அணியின் டாமி பேமோட்டின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். இந்த பட்டியலில் அவுஸ்திரேலியா வீராங்கனை மெக்லானிக் 15 சதங்களுடன் முதலிடத்திலும், நியூசிலாந்தின் சுசி பேட்ஸ் 13 சதங்களுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

இதனிடையே இரட்டை சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 80 பந்துகளில் 135 ஓட்டங்கள் எடுத்து மந்தனா ஆட்டமிழந்தார். மறுமுனையில் தொடர்ந்து அபாரமாக விளையாடி வந்த பிரதிகா ராவல் 129 பந்துகளில் 154 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 233 ஓட்டங்கள் சேர்த்து சாதனை படைத்தது.

இறுதியில் ரிச்சா கோஸ் 59 ஓட்டங்களும், தேஜால் 28 ஓட்டங்களும், ஹர்லின் டியோல் 15 ஓட்டங்கள் எடுக்க இந்திய மகளிர் அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 435 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தது. இதன் மூலம் மகளிர் கிரிக்கெட்டில் இந்திய அணி தங்களுடைய அதிகபட்ச அணி ஓட்டத்தை நிர்ணயித்திருந்தது.


இதனையடுத்து 436 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை எதிர்கொண்ட அயர்லாந்து மகளிர் அணியினர் ஆரம்பம் முதலே ஓட்டங்களை சேர்க்க தடுமாறினர். கேபி லீவிஸ் ஓர் ஓட்டத்திலும், கிறிஸ்டினப ஓட்டமின்றியும் ஆட்டமிழந்தனர், ஒர்லா 36 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க, அதிகபட்சமாக தொடக்க வீராங்கனை சாரா போப்ஸ் 41 ஓட்டங்கள் எடுத்தார்.

மற்ற வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அயர்லாந்து மகளிர் அணி 31.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 131 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இந்திய அணியின் சார்பில் அதிகபட்சமாக தீப்தி சர்மா 3 விக்கெட்களை வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய மகளிர் அணி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, தொடரையும் 3-0 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

மகளிர் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு இது அதிகபட்ச ஓட்டங் கள் வித்தியாசத்தில் பெற்ற முதல் வெற்றியாகும்.

இந்திய ஆடவர் அணி 418 ஓட்டங்கள் குவித்ததே சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியாவின் அதிகபட்ச ஓட்டமாக இருந்த நிலையில், அந்த சாதனையை முறியடித்த இந்திய மகளிர் அணி, அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 435 ஓட்டங்கள் குவித்து அசத்தியது. (எ)

# ஆஸி ஓபன் ரென்னிஸ் கோகோ காப் வெற்றி



மெல்பேர்ன், ஜன.17

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் கோகோ காப் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். "கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் திருவிழா மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் கோகோ காப், இங்கிலாந்தின் பர்ரேஜ் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கோகோ காப் 6 - 3 மற்றும் 7 - 5 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)

# பாகிஸ்தான் செல்கிறார் இந்திய அணி தலைவர்

மும்பை,ஜன.17

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ஆரம்ப விழாவில் பங்கேற்க இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா பாகிஸ்தான் செல்லவுள்ளார் எனத் தெரிய வந்துள்து.



இந்தத் தொடருக்கான தொடக்க விழாவை பிர மாண்டமாக நடத்த பாகிஸ்தான் கிரிக் கெட் சபை திட்ட மிட்டுள்ளது.

இந்தத் தொடருக்கான தொடக்க விழாவை அடுத்த மாதம்16 அல்லது 17ஆம் திகதி நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. மேலும், 8 அணிகளின் தலைவர்களை வைத்து படம் எடுக்க வேண்டும். ஐ. சி. சி. போட்டி நடைமுறைப்படி இவ்விரு நிகழ்ச்சிகளிலும் அனைத்து அணிகளின் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டி யது அவசியமாகும். எனவே இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா பாகிஸ்தான் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. (எ)

# மூன்றாவது சுற்றில் ஜெசிகா, ஒசாகா



மெல்பேர்ன், ஜன.17

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா, நவோமி ஒசாகா 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் ஓர் ஆட்டத்தில் முன்னணி வீராங்கனையான ஜப்பானின் நவோமி ஒசாகா, செக் குடியரசின் கரோலினா முச்சோவாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 1 -6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த ஒசாகா, ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 6-1, 6-3 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இறுதியில் 1-6, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் கரோலினா முச்சோவாவை வீழ்த்தி நவோமி ஒசாகா 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டென்ஸ் உடன் மோதினார். தொடக்கம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6-4, 6-2 என்ற செட் கணக்கில் எலிஸ் மெர்டென்ஸை வீழ்த்தி ஜெசிகா பெகுலா 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# ஜோகோவிச் அபாரம்

மெல்பேர்ன்,ஜன.17


அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ஜோகோவிச், அல்காரஸ் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2அவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் ஓர் ஆட்டத்தில் முன்னணி வீர ரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், போர்த்துக்கலின் ஜெய்ம் பாரியாவுடன் மோதினார்.



விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6-1, 6-7 (4-7), 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ஜெய்ம் பாரியாவை வீழ்த்திய ஜோகோவிச் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், ஜப்பா னின் யோஷிஹிட்டோ நிஷியோகாவுடன் மோதினார். இந்தப் போட்டியில் தொடக்க முதலே ஆதிக்கம் செலுத்திய அல்காரஸ் 6-0, 6-1, 6-4 என்ற செட் கணக் கில் யோஷிஹிட்டோ நிஷியோகாவை எளிதில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# ஐ. சி. சி. தரவரிசையில் தீக்ஷனா மூன்றாமிடம்



டுபாய்,ஜன.17

ஐ. சி. சி ஆடவர் ஒருநாள் பந்துவீச்சு தரவரிசையில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷனா மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இறுதி இரண்டு போட்டிகளில் 7 விக்கெட்களை வீழ்த்திய நிலையில் தீக்ஷனா [illegible]ள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.17

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் முன்றிலில் இன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனும் கலந்துகொள்வர்.

## இலங்கையில்...

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முதலீட்டு அமர்வில் பிரதம அதிதி யாக கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்றுக் காலை அரச மற்றும் தனியார்துறை முதலீட்டு அமர்வில் பங்கேற்றார்.

சீனா டியான்யிங் இன்கோபரேசன், சீன ஹார்பர் பொறியியல் நிறுவனம், சீனத் தொலைத் தொடர்பு நிர்மாணக் கம்பனி லிமிடெட், சீனா பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம், மெடலர்ஜிக்கல் கோப்பரேசன் ஒப் சைனா நிறுவனம், சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம், சீனா எனர்ஜி இன்ரர்நஷனல் குழும நிறுவனம், குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் உட்பட பல முன்னணி சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டு அமர்வில் பங்கேற்றன.

அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதர் மஜிந்த ஜெயசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

## இலங்கை...

சிநேகபூர்வமாக வரவேற்றார்.

மேலும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் சீனப் பிரதமர் லி சியாங் உறுதியளித்தார்.

ஊழலற்ற நாட்டை உருவாக்கும் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத் திட்டத்துக்கு சீனப் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பாஹியன் பிக்குவின் காலத்திற்கு முன்பிருந்தே சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு காணப்பட்டதென சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் வறுமையை ஒழித்து இலங்கையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் சீனப் பிரதமரிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தற்போதும் இலங்கைக்கு சீன அரசாங்கம் வழங்கிவரும் உதவிகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அதற்காக சீன அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால நட்புறவை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் கலாசார பரிமாற்றம், வர்த்தகம் மற்றும் அரசியல் ஒத்துழைப்பு குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## மன்னாரில்...

நீதிமன்றத்துக்கு வருகை தந்தவர் களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் படுகாயமடைந்த இரு ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 61 வயதான சவேரியன் அருள் மற்றும் 42 வயதான செல்வக்குமார் யூட் என தெரிய வந்துள்ளது.

படுகாயம் அடைந்த ஆணொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டார்.

உயிரிழந்த இருவரும், காயமடைந்த ஆண் ஒருவரும் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறவிருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றனர் எனத் தெரியவருகிறது.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இரட்டைப் படுகொலையை தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் இவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## சிறீதரன்...

தெரிவிக்கையில்-

தற்போது எமது கடற்றொழில் அமைச்சராக உள்ள சந்திரசேகரனுக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுடன் கதைப்பதற்கு நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அவர்கள் அதனை சரியாக பயன்படுத்தவில்லை.

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்கு இருந்த போதே இலங்கை மீனவர்களின் பிரச்னைகளை முதலமைச்சரிடம் எடுத்துக் கூறாமல் இங்கு வந்த பின்னர், முதலமைச்சருடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுள்ளதாகவும், மீனவர்களின் பிரச்னைகளை கதைக்கப் போவதாகவும் கூறுகின்றார். இதெல்லாம் பகட்டுக்கும், எதிர்காலத்தில் மீனவர்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காகவும் கூறுகின்றார்.

இந்தியாவில் தேர்தல் நெருங்குகின்றது. தேர்தல் காலத்தில் உங்களுக்கு நேரம் ஒதுக்கி தரமாட்டார்கள். இயலும் என்றால் நீங்கள் நேரத்தைப் பெற்று நமது மீனவர்களின் பிரச்னை குறித்து பேசித் தீருங்கள். அதற்கு பின்னர் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கதைப்பதற்கு, கடந்த காலத்தில் கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடமும் கோரிக்கை முன்வைத்தோம். இதன்போது அவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கனிமொழி ஆகியோரிடம் இது குறித்து தெரிவித்தார். இருப்பினும் எமக்கான நேரம் வழங்கப்படவில்லை. அப்படி எமக்கு நேரம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் எமது பிரச்னைகளை நேரடியாகவே எடுத்துக்கூறி இருப்போம் - என்றார். (அ-05)

## இலங்கை - இந்திய...

தெரிவிக்கையில்-

தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றார்கள்.

குறித்த நிகழ்வில் இலங்கையிலிருந்து சென்ற சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்பி எடுத்தமை சமூக ஊடகங்களில் வெளியாகியது.

இலங்கை-இந்திய மீனவர் விவகாரம் பல வருடங்களாக பேசுபொருளாக இருக்கின்ற நிலையில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துமாறு தமிழக முதல்வரிடம் நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு பேசியதாக தெரியவில்லை.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழக முதல்வருடன் மீனவ விவகாரம் தொடர்பில் பேசுவதற்கு தயாராக இருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்தானது வடபகுதி மீனவர்களை ஏமாற்றும் ஒரு நாடகமாக நான் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் தமிழக முதல்வரின் அருகில் அமர்ந்திருக்கும் போது மீனவ விவகாரம் தொடர்பில் பேசி இருக்கலாம். அல்லது குறித்த நிகழ்வு முடிவடைந்த பின் தமிழக ஊடகங்களுக்கு இந்த மீனவர் விவகாரத்தில் உண்மதன்மையை தொடர்பில் தெரியப்படுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

நான் கடற்தொழில் அமைச்சராக இருந்தபோது இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுகின்ற பிரச்னை தொடர்பில் இரு நட்டு மீனவர்களையும் அழைத்து தமிழ்நாட்டில் பேசுவதற்காக தமிழக தலைவர்களுடன் பேசினேன். நேரில் பேசுவதற்கு நேரம் தருவதாக கூறினார்கள் துரதிர்ஷ்டம் அதிகாரம் என்னிடம் இல்லை.

நான் தற்போது அதிகாரத்திலிருந்து குறித்த நிகழ்வுக்கு தமிழ்நாடு சென்று இருந்தால் தமிழக முதலமைச்சருடன் பேசி இரு நாட்டு மீனவர்களையும் அழைப்பது தொடர்பில் முடிவு எடுத்திருப்பேன். இதையே நான் கூறுகிறேன் என்றால் எனது அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்காக பல விடயங்களை சந்தர்ப் பம் பார்த்து பலவற்றை சாதித்திருக்கி றேன்.

உதாரணமாக கூறவேண்டுமானால் அறிவியல் நகர் பல்கலைக்கழகத்தை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு மகிந்த ஜனாதிபதியாக இருந்த போது அனுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவரிடம் பேசி சம்மதத்தை பெற்றேன்.

ஒருவேளை அறிவியல் நகர் பல்கலைக்கழகத்தை விடுவிப்பது தொடர்பில் பேசுவதற்கு நேரம் கேட்டிருந்தால் ஒரு வேளை அது நடைபெறாமல் போயிருக்கும்.

இதுபோன்ற பல உதாரணங்களை என்னால் குறிப்பிட முடியும் இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு கொண்டு சென்றதும் அவர்களின் சுயலாப அரசியலுக்காக.

போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்ற நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. அதற்கான பல சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் அதனை தமிழ் அரசியல் தலைமைகள் பயன்படுத்தவில்லை.

இப்போது இந்தியா மீனவர்களின் எல்லை தாண்டிய விவகாரம் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனையும் தமிழ் அரசியல்வதிகள் தமது சுயலாப அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றார்கள்.

நான் அமைச்சராக இருந்தபோது வாருங்கள் இந்தியா சென்று மீனவர் விவகாரம் தொடர்பில் பேசுவோம் என்றேன் ஒரு சிலரை தவிர ஏனையவர்கள் மறுத்துவிட்டார்கள்.

தேர்தலின்போது நான் பல ஆசனங்களை கேட்கவில்லை சில ஆசனங்களை எனக்கு தாருங்கள் மக்களின் அரசியல் அன்றாட பிரச்சனை மற்றும் அபிவிருத்தி என்பவற்றை தீர்த்து வைக்கிறேன் என வெளிப்படையாகவே கூறி வந்தேன்.

ஆனால் மக்கள் ஏதோ ஒன்றை நம்பி வாக்களித்து தற்போது ஏமாற்றம் அடையும் நிலையை எதிர்நோக்கி உள்ளனர்- என்றார். (அ-05)

## உலக...

ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## சீன...

பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

சந்திப்பின் இறுதியில் சீன ஜனாதிபதியை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை சீன ஜனாதிபதி அன்புடன் ஏற்றுக்கொண்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை தமது சீன பயணத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நாடு திரும்ப உள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## தீர்வுத்திட்ட...

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேசி முடிவெடுப்போம்."

-இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

உடுப்பிட்டி மதுபானச்சாலை ஏன் தொடர்ந்தும் இயங்கவேண்டும் என்பது தொடர்பில் வழக்கு சாட்சியமளிப்பு இடம்பெற்று வருகின்றது. நாட்டிலே அதிகரித்த மதுபானச்சாலைகள் தொடர்பில் பல பிரச்னைகள் எழுந்துள்ளன. அதிகரித்த மதுபானப் பாவனையால் நேற்றும் பருத்தித்துறையில் வாள் வெட்டு, கத்திக் குத்து இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இன்று நீதிமன்றின் முன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலை நாட்டுக்கு நல்லதல்ல.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்த காலத்தில் பார் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இலஞ்சத்தை ஒழிப்போம், பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று கூறி வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களும் இலஞ்சத்துக்குத் துணை போனவர்களாகத்தான் பார்க்க முடியும். நாம் சவால் விடுகின்றோம், முடிந்தால் பார் லைசன்ஸ் விவகாரத்தை உடன் வெளியிடுங்கள். இல்லையேல் நீங்களும் ஊழல்வாதிகள்தான்.

இலங்கை விடயம் சம்பந்தமாக தி.மு.கவின் எம்.பி. கனிமொழியுடன் சந்திப்பை நடத்தியிருந்தோம். மத்திய அரசில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை குறைந்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் தீர்வு விடயத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மூன்று ஆண்டுகள் தேவை என்று கூறுகின்றது. அவ்வாறு தேவையில்லை. இது ஏற்கனவே இணங்கிக் கொண்ட விடயம். எனவே, இவ்வளவு காலம் தேவையில்லை. காலத்தை இழுத்தடிப்பது அதை இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் இறையாண்மைக்கு அர்ப்பணிப்புடன் உள்ளது சீன அரசு!

## தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர்

பீஜிங், ஜன. 17

**இலங்கையின் சுயாதீனத் தன்மை, ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக சீனா அர்ப்பணிப்புடன் உள்ளதென சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி தெரிவித்தார்.**

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோருக்கு இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு சீன தேசிய காங்கிரஸ் நிலைக் குழுவின் தலைவர் சிநேகபூர்வமாக வரவேற்பளித்தார்.

மேலும், கருத்து தெரிவித்த ஜாவோ லெஜி, இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைத்துச் செயற்படவேண்டும் என்பதே சீன தேசிய காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும் எனவும் கூறினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர். (அ)



# இந்தியத் தூதுவர் சஜித்துடன் பேச்சு



கொழும்பு, ஜன. 17

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ ஆகியோர் இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் இடம்பெற்றது.

பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் விவகாரங்கள் பல குறித்து இங்கு இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதோடு, அருகிலுள்ள அண்டை நாடு என்ற வகையில் பல தசாப்தங்களாக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தனது நன்றியைத் தெரிவித்தார். அவ்வாறே, நமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை தொடர்ந்து வழங்குமாறும் இந்தியத் தூதுவரிடம் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# 'பொடி லெசி' இந்தியாவில் கைது!

கொழும்பு, ஜன. 17

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகக் கும்பலின் தலைவருமான 'பொடி லெசி' என அழைக்கப்படும் ஜனித் மதுசங்க என்பவர் இந்தியாவின் மும்பை நகரத்தில் வைத்து சர்வதேச பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

'பொடி லெசி' கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச பொலிஸாரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தினால் வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட "பொடி லெசி" இலங்கையிலிருந்து தப்பிச் சென்றதாகக் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியிருந்தது.

இதனையடுத்து, சர்வதேச பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 'பொடி லெசி' மும்பை நகரத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்க ஆராய்வு

கொழும்பு, ஜன. 17

அமைச்சர்கள் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்கு வாகனங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும், அவர்களுக்காக டபிள் கப் வண்டிகளை இறக்குமதி செய்வதா அல்லது வேறு மூலத்திலிருந்து பெற்றுக் கொள்வதா என்பது குறித்து பரிசீலித்து வருவதாகவும் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்கூட்டியே வரியற்ற வாகன இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்குப் பதிலாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரச வாகனங்களை ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செலவுகளைக் குறைக்கும் நோக்கில், அவர்களுக்கு அதிசொகுசு வாகனங்களை வழங்குவதில்லை என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திடம் போதுமான சொகுசு வாகனங்கள் இருந்தாலும், கொள்கையின்படி அவற்றை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க முடியாது என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

சொகுசு வாகனங்கள் குறித்து தற்போது மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பின்னர் அவை ஏலம் விடப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# தே. ம. சக்தி ஆதரவாளர்கள் மீது யாழில் வாள்வெட்டுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஜன.17

தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் மீது யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது.

தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்து, பத்து நிமிடத்தில் மோட்டார் சைக்கிளில் குழுவாக இறங்கி சரமாரியாக நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை கொட்டடி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயதீபன் கண்ணன் (வயது- 28), விஜயராசா செந்தூரன் (வயது- 29) ஆகிய இருவருக்கும் தலை மற்றும் கால் பகுதிகளில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பருத்தித்துறை, கொட்டடியைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளருக்கு தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்திய நபர் ஒருவர் "நீ தானே தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர், கரையோரப் பகுதிகளில் கட்சிக்காக வேலை செய்கிறாய்? உனது இடத்துக்கு வாள்வெட்டுக் குழுவென்று வருகிறது, பார்த்துக்கொள்" என்று கூறிவிட்டு தொடர்பை துண்டித்துள்ளார்.

இவ்வாறு, அச்சுறுத்தல் விடுத்து சுமார் பத்து நிமிடத்தில் கொட்டடி பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்தவர்களை துரத்தித் துரத்தி வாள்களால் சரமாரியாக வெட்டியுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு இலக்காகிய தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரின் சகோதரன் உட்பட இருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# குழந்தைகளிடையே நோய்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 17

நாட்டிலுள்ள குழந்தைகளிடையே நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கல்லீரல் நோய்கள் மற்றும் நுரையீரல் நோய்கள் என்பன தற்போது அதிகரித்து வருவதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவ பீடத்தின் குழந்தை மருத்துவத் துறையின் பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவித்தார்.

அதன்படி, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், குழந்தைகள் ஆரோக்கியமான உணவைப் பின்பற்ற ஊக்குவிப்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கூடுதலாக, குழந்தைகளிடையே மனநிலை தொடர்பான நோய்களும் தொடர்ந்து பதிவாகி வருவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, யுனிசெப், கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு ஆகியவை இணைந்து பாடசாலை மாணவர்களிடையே அறிவு திறன் சம்பந்தமான போட்டியை ஏற்பாடு செய்துள்ளன.

இப்போட்டியின் இறுதிச் சுற்று 25ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படையின் தலைமை அதிகாரியாக ரியர் அட்மிரல் டாமியன் பெர்னாண்டோ



கொழும்பு, ஜன. 17

இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரியாக ரியர் அட்மிரல் டாமியன் பெர்னாண்டோவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

இதற்கான நியமனக் கடிதத்தை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொட நேற்று முன்தினம் புதன்கிழமை கடற்படைத் தலைமையகத்தில் வைத்து ரியர் அட்மிரல் பெர்னாண்டோவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்ததுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (அ)

# வாகன இறக்குமதியால் காத்திருக்கும் அபாயம்!

## எச்சரிக்கிறார் ரவி கருணாநாயக்க

கொழும்பு, ஜன. 17

வாகனம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், ரூபாவின் பெறுமதியை பாதுகாப்பது அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது, ஏற்றுமதியையும் சீராகப் பேணினால் ரூபாவின் பெறுமதியை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லையெனில், நாட்டின் டொலர் கையிருப்பு பாதிக்கப்படும். அது மக்களை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் கொண்டு செல்லும்.

நாங்கள் வாகன இறக்குமதிக்கு எதிரானவர்கள் அல்ல. எனினும், எமது கருத்தை வெளிப்படுத்தியமைக்கு நாங்கள் வாகன இறக்குமதியை தடுக்கின்றோமா என கேள்வி எழுப்பினர்கள்.

நாட்டின் டொலர் கையிருப்புக்கு ஆபத்து ஏற்படாது இருப்பின் வாகன இறக்குமதி நல்லது என்பதையே நாம் சுட்டிக்காட்டினோம். இரவில் நாம் விழுந்த குழியில் பகலில் விழ வேண்டும் என அவசியமில்லை.

இதேவேளை, ஜனாதிபதி இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

எம்மால், கிணற்றுத் தவளை போலச் செயற்பட முடியாது. எனவே, ஜனாதிபதி பல நாடுகளுக்கு விஜயம் செய்ய எனது நாம் வரவேற்கின்றோம்.

ஏனைய நாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்படுத்தும் என்றால் அவை வரவேற்கத்தக்கவை-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org